# தொடர்பு 62

# THODARPU

January - February - 2002




Pray & Proceed

EDITOR
DEVADASON JEYASINGH

தாசன் வெளியீட்டகம்
90 கண்டி ரோட், கெங்கல்ல.
Tel: 072-623888

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாசகரின் வசதிக்காக

| விடயம் | பக்கம் |
|---|---|
| ஆசிரியரிடமிருந்து . . . . . | 01 |
| நாம் பூரணராகும்படி. . . . . | 02 - 05 |
| நான் ஒரு போதகனல்லவா? | 06 |
| கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் | 07 - 09 |
| உனக்கு ஆபத்தா? | 10 |
| பரதேசியின் மோட்ச பயணம் - தொடர் கனவு | 11 - 17 |
| நாவும் பற்களும் - உரையாடல் | 18 |
| 'தெளிவு' பத்திரிகையின் வாழ்த்து | 19 |
| கந்தவர்க்க மலை ரகசியம் - தொடர் காவியம் | 20 - 23 |
| மீனவன் பேதுரு - சிறுவர் பகுதி | 24 - 26 |
| சிற்பியின் செயல் - சிந்தனைக்கு | 27 |
| வேதாகமப் புதிர் - 62 | 28 |




Thodarpu : Christian Literary Bi-Monthly

Founded : 25.12.1991

Founder : (Late) Revd. Rajakumar Thurairajah

Editor : Bro. Devadason Jeyasingh
'Dasons' 90 Kandy Road, Kengalla - 20186
Tel: 072-623888

Type Setting : G. Nila
**MECK Computer Division**
No. 127/2/2, Kotugodella Street, Kandy.
Tel: 08-200874

Printers : **K. Double I. Press**
No. 156, D.S.S. Veediya, Kandy.
Tel: 08-226938

62ND ISSUE ✡ THODARPU ✡ 1ST FEBRUARY 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பு 62

## ஜனுவரி - 2002 - பெப்ருவரி

அன்பார்ந்த வாசகரே,

எல்லாப் புகழும் வல்லோன் இறைவனுக்கே!

எல்லாம் வல்ல இறைவனின் நாமத்தில் எமது நல் வாழ்த்துக்கள்!

காலம் தாழ்த்தியேனும் புத்தாண்டு வாழ்த்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வழிநடத்திய வல்ல தேவனுக்குத் துதி செலுத்துவோமாக.

அண்மைக் காலமாக சஞ்சிகை வெகுவாகக் காலந் தாழ்த்தி வெளிவருவது குறித்து மன்னிக்கவும். இதற்கு யாரை நொந்து கொள்வது என்றே தெரியவில்லை.

எனினும், இவ் வருடம் உரிய வேளையில் வெளிவர வேண்டுமென உறுதி பூண்டுள்ளோம். இதற்கு இறைவனின் திருவருள் கிட்ட பிரார்த்திப்போம்.

புதிய சந்தா விபரம் தொடர்பாக பின்புற அட்டையை தயவு செய்து அவதானிக்குமாறு அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உங்களுடைய ஜெபம், ஒத்துழைப்பு ஆகியவற்றோடு தொடர்பு தொடர்ந்து வளரும்; வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நன்றி.

இறைபணியில்
தேவதாசன் ஜெயசிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பூரணராகும்படி...

எலியா, தீர்க்கதரிசி கில்கால், பெத்தேல், எரிகோ, யோர்தான் ஆகிய வழிகளுக்கூடாகக் கடந்து வந்து உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்.

அதே நேரத்தில் எலிசாவும் இந்த இடங்களுக்கூடாகக் கடந்து வந்து, ஆவியின் வரங்களை, இரட்டிப்பாகப் பெற்றுக் கொண்டவர்.

கர்த்தரின் வருகையில் நாமும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமானால் - கர்த்தர் தமது கரங்களில் நம்மை எடுத்துப் பாவிக்க வேண்டுமானால்-நாமும் கில்கால், பெத்தேல், எரிகோ, யோர்தான் போன்ற அனுபவங்களுக் கூடாகக் கடந்து வரவேண்டும்.

இந்த நான்கு அனுபவங்களைக் குறித்தும் தியானிக்க தேவ சமுகத்தில் நம்மைத் தாழ்த்துவோமாக.

**✣ கில்கால்**

கில்கால் என்றால் "புரட்டிப் போடுதல்" எனப் பொருளாகும். அதாவது கர்த்தர் எகிப்தின் நிந்தையைப் புரட்டிப் போட்ட இடமாகும். "இன்று எகிப்தின் நிந்தை உங்கள் மேல் இராதபடிக்குப் புரட்டிப்போட்டேன் என்றார். அதனால் அந்த ஸ்தலம் இந்நாள் வரைக்கும் 'கில்கால்' எனப்படுகின்றது. (யோசு 5:9)

***Bro. K. Manikkarajah***

அன்று இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியே வந்தாலும்கூட, அவர்களைப் பின்தொடர்ந்து வந்த எகிப்தின் நிந்தைகள் - அவமானங்களைக் கர்த்தர் அவர்களை விட்டு அகற்றிய இடம்தான் கில்கால்.

நம் ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையினால் நம்மைத் தொடர்ந்து வந்த சாபங்கள், பாவங்கள், யாவும் நம்மேல் இராதபடி, கர்த்தர் நம்மை விட்டுப் புரட்டிப் போட்ட ஒரு கில்கால் இன்று நமக்கும் உண்டு. ஆம்; அந்தக் கில்கால் கல்வாரிச் சிலுவையாகும். நமக்கு விரோதமாக இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவில் இராதபடி எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து வெற்றி சிறந்தார். (கொலோ : 2:14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கில்கால் இரட்சிப்பின் சந்தோஷத்தை, நமக்குத் தருகின்றது. பாவபாரத்தினாலும் சாபத்தினாலும், நிம்மதியற்று அலைந்து திரியும் ஒவ்வொருவருக்கும் சிலுவையண்டை வரும்போது இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. நீர் இந்த அனுபவத்தைப் பெற்றிருக்கின்றீரா? இல்லையானால் சிலுவையண்டை வந்து கில்காலின் அனுபவத்தை உமதாக்கிக்கொள்ளும். இவ்வனுபவத்தைப் பெற்றிருப்பீரானால் அதை நாள்தோறும் புதுப்பித்துக் கடந்து செல்ல மறக்க வேண்டாம்.

கில்கால் என்பதன் மற்றுமொரு ஆவிக்குரிய அனுபவம் என்னவென்றால் கில்கால் ஓர் ஆரம்பத்தின் இடம். இஸ்ரவேலர் இங்கேதான் பாளயமிறங்கினார்கள். இஸ்ரவேல் தேசத்தின் எல்லை. இங்குதான் ஆரம்பிக்கின்றது. இங்கே கர்த்தர் ஒவ்வொருவரையும், விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளும்படி யோசுவாவுக்குக் கட்டளையிட்டார். அப்படியே அவர்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொண்டார்கள்.

விருத்தசேதனம் பழங்கால மக்கள் கடைப்பிடித்து வந்த சுத்திகரிப்பின் சடங்காகும். இது இஸ்ரவேல் இனங்களையும் புறஜாதியாரையும் வேறுபிரித்துக் காட்டியது.

நாமும் கிறிஸ்துவண்டை வரும்போது கில்காலின் முதல், அனுபவமாகிய இரட்சிப்பின் சந்தோஷம் நமக்குக் கிடைக்கின்றது. இரட்சிப்பே எங்கள் ஆவிக்குரிய ஜீவியம் ஆரம்பிக்கும் எல்லையாகும். ஆவிக்குரிய வாழ்க்கை வாழ ஆரம்பிக்கும் ஒவ்வொருவரும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் இந்த விருத்தசேதனத்திற்கு அடையாளமாகின்றது.

ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பாவங்களுக்கென மரித்து சுத்திகரிக்கப்பட்டவர்களாக பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கென கிறிஸ்துவுடன் எழுந்திருக்க வேண்டும். ஆம்; நாம் தேவனால் பரிசுத்தமாக்கப்படுவதற்கென அழைக்கப்பட்ட ஜனம். விருத்தசேதனம் இஸ்ரவேலரையும் புறஜாதியாரையும் வேறாகப் பிரித்தது போல ஞானஸ்நானமும் உலகத்திலிருந்து வேறுபிரிக்கின்றது. மாறுபாடுள்ள இச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் (அப் 2:40)

ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இருக்கக்கூடாது கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவு இருக்கக் கூடாது. அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்கேது? நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக இருக்கின்றீர்களே. ஆனபடியால் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகின்றார் (2கொரி. 6:14-18)

ஆம்; நாம் உலகத்திலிருந்தாலும் உலகத்தவரல்லாதவர்கள் போல வாழவேண்டியவர்கள். கில்காலின் மற்றுமொரு அனுபவமாகிய வேறுபிரித்தலின் ஜீவியத்தை எமது அனுபவமாக்கிக் கொள்வோமாக. கில்காலிலே இஸ்ரவேலர் பஸ்காவை ஆசரித்தார்கள். பஸ்காவின் மறு நாளாகிய அன்றைய தினம் அவர்கள் தேசத்தினுடைய தானியத்தினாலாகிய புளிப்பில்லாத அப்பங்களைப் புசித்தார்கள்.

'பஸ்கா' என்பது அடிக்கப்படும் ஆட்டுக் குட்டியைக் குறிக்கின்றது. இந்தப் பண்டிகைக்கு முக்கியமானது ஆட்டுக்குட்டி, இயேசுவும் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். தேவபிள்ளைகளாகிய நம்முடைய பஸ்கா கிறிஸ்துவே.

பஸ்காவைச் சாப்பிடுவது போல நாமும் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். ஆம்; இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகள். அவரின் வார்த்தைகளைத் தினமும் உட்கொள்ள வேண்டும். உட்கொண்டு அவருடன் ஐக்கியப்பட்டு அவருக்குள் திருப்தி அடைய வேண்டும்.

இஸ்ரவேலர் பாலைவன வாழ்க்கையிலிருந்து வாக்களிக்கப்பட்ட வாழ்க்கைக்குள் நுழைந்த போது அந்த தேசத்தின் தானியத்தைப் புசித்தார்கள். அது போல நாங்களும் இவ்வுலகமாகிய பாலைவன வாழ்க்கையிலிருந்து இரட்சிப்பு என்ற வாக்களிக்கப்பட்ட, வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும்போது பரலோக தானியமாகிய வேதவசனத்தைப் புசிக்கக் கூடியவர்களாக மாறுகின்றோம்.

இரட்சிக்கப்படுமுன் சினிமாப் புத்தகங்கள் கதைப் புத்தகங்கள் போல்வன நம்மை அதிகமாக திருப்தி செய்தன. வேத வசனமோ, வேப்பங்காய் போல் கசப்பாய்க் காணப்பட்டது. ஆனால் இரட்சிக்கப்பட்ட பின் வேத வசனங்களின் ருசிக்கு நிகராக எதுவுமே இல்லை.

மானானது நீரோடையை வாஞ்சிக்கிறது போல நம் ஆத்துமாவும் கர்த்தரின் சமுகத்தையும் ஜெபக் கூட்டங்கள், வேதப் படிப்புக்களையும், வாஞ்சித்துக் கதறி ஓடுகின்றது. வேத வசனத்தினால் உம் ஆத்துமாவைத் திருப்தியாக்கும் கில்காலின் அனுபவத்தை நீர் பெற்றிருக்கின்றீரா? இல்லையாயின் இவ்வனுபவத்தை உம் ஆத்துமா வாஞ்சிக்கட்டும்.

'கில்காலின்' மற்ற அனுபவம் தேவன் நமக்குத் துணை நிற்பதாகும். இங்குதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருடைய தூதனானவர் சேனைகளின் அதிபதியாய் இஸ்ரவேலுக்குத் துணை வந்தார், யோசுவா தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது உருவின பட்டயத்தை உடைய ஒருவர் நிற்பதைக் கண்டு 'நீர் என்னைச் சார்ந்தவரோ? என்று கேட்டான். அதற்கு அவர் ''நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன்". என்றார்.

இஸ்ரவேலர் கில்காலில் பாளயமிறங்கி விருத்தசேதனம் செய்யப்பட்டு பஸ்காவை ஆசரித்த வேளையில் கர்த்தரின் தூதன்அவருக்குத் துணையாக வந்தார். ஆம்; இரட்சிக்கப்பட்டு வேறு பிரிக்கப்பட்ட ஜீவியம் செய்து கர்த்தரின் வார்த்தையின்மேல் வாஞ்சையாயிருக்கும் போது கர்த்தரின் துணை நமக்குக் கிடைக்கின்றது.

''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்று நம்மோடு உடன்படிக்கை செய்திருக்கின்றார். நம்முடைய வழிகளிலெல்லாம் நம்மைக் காக்கும்படி தம்முடைய தூதர்களுக்குக் கட்டளை இடுகின்றார்.

நம்முடைய யுத்தங்களை அவர் முன்னின்று நடத்துகின்றார். ஆம்; இந்தப் பாக்கியம் இரட்சிக்கப்பட்டவர்களுக்கே கிடைக்கின்றது. எனவே, கில்காலின் ஒவ்வொரு அனுபவங்களையும் நம் ஆவிக்குரிய வாழ்க்கையின் அனுபவமாக்கிக் கொள்ள பிரயாசப்படுவோமாக.

எலியாவைக் கர்த்தர் எடுத்துக் கொள்ளும் வேளையில் எலியா கில்காலிலிருந்து புறப்பட்டுப் போனான்.

நாமும் கர்த்தரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட இரட்சிப்பு, வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை, வேதவசனங்கள் மேல் வாஞ்சை, கர்த்தரின் துணையை அனுபவித்தல் ஆகிய கில்காலின் அனுபவங்களை எமது அனுபவமாக்கிக் கொள்வதுடன் அதற்குள்ளேயே திருப்தி அடைந்து நின்றுவிடாது தொடர்ந்தும் மற்றைய அனுபவங்களுக்கூடாகவும் கடந்து செல்ல வேண்டும். இன்னும் மகிமையான அனுபவங்கள் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன.

'கில்கால்' ஓர் ஆரம்ப இடமாகும். ஆகவே இதற்குள் திருப்தி அடைந்து விடாதீர்! முன்னேறிச் செல்லும்!

**காலேப் (GALEB) இருவர்**

1. எஸ்ரோனின் குமாரன் காலேப் - 1 நாளா 2:18
2. எப்புன்னேயின் குமாரன் காலேப் - எண் 13:06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு போதகனல்லவா?

✦ என்னைக் குறித்து இந்தக் கேள்விகளா?
என்ன பதில் சொல்லுவேன்?



✦ நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும்
என் உடன்படிக்கையை
உன் வாயினால் சொல்லவும்
உனக்கு என்ன நியாயம் உண்டு?

✦ சிட்சையை நீ பகைத்து

✦ என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்து போடுகின்றாய்!

✦ நீ திருடனைக் காணும் போது அவனோடு ஒருமித்துப் போகின்றாய்!

✦ விபசாரக்காரரோடும் உனக்குப் பங்குண்டு!

✦ உன் வாயை பொல்லாப்புக்குத் திறக்கின்றாய்!

✦ உன் நாவு கற்பனையைப் பிணைக்கின்றது!

✦ நீ உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி
உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகின்றாய்!

இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாய் இருந்தேன். உன்னைப் போலவே நானும் இருப்பேன் என நினைவு கொண்டாய். ஆனால், நான் உன்னைக் கடிந்து கொண்டு அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்!

தேவனை மறக்கிறவர்களே!
இதைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்!

-சங் – 50: 16 - 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாணவர் பகுதி

# அப்போஸ்தலர் நிருபங்கள்



- அருள் திரு. உ. தோ. சத்தியநாதன் அடிகளார் -

## 5 கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம்

கலாத்தியாநாடு சின்ன ஆசியாவுக்கு மத்தியிலிருந்தது. கிறிஸ்துவுக்கு முன் 280ஆம் வருடத்தில் பிரான்ஸ் தேசத்திலுள்ள காலியர் அல்லது (Kelts) கெல்ட்டியர் என்று சொல்லப்பட்ட ஜனங்கள் அந்த நாட்டைப் பிடித்து அதில் குடியேறியதால், அதற்குக் கலாத்தியா என்று பெயர் வழங்கிற்று. கிரேக்க தேசத்திலிருந்தும் அநேக ஜனங்கள் அவ்விடத்திற்குப் போய்க் குடியேறி, கிரேக்க மொழியைப் பேசிவந்தபடியால், அதற்கு (Gallo Grecia) காலோ கிரேஷியா என்றும் பெயர் இருந்தது. யூதரிலும் அநேகர் வியாபார விடயமாய் அவ்விடத்திற்குப் போய்க் குடியேறியிருந்தார்கள். கிறிஸ்துவுக்கு முன் 189 ஆம் வருடத்தில் அது ரோமருடைய அரசாட்சிக்குள் அமைந்தது, 26ஆம் வருடத்தில் முற்றிலும் அவர்களுடைய ஆதீனத்திற்குட்பட்ட நாடாயிற்று.

காலாத்திய நாட்டார் உறுதியும் ஊக்கமும் உள்ளவர்களல்ல அவர்கள் நாகரிகமற்றவர்களாயும் கொடிய விக்கிரகாராதனைக்காரராயும் இருந்தார்கள்.

பவுல் அப்போஸ்தலன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பொருட்டு லிக்கோனியா நாட்டின் சுற்றுப்புறங்களுக்குப் போன சமயத்தில் கலாத்திய நாட்டுக்கும் போயிருக்கலாம். (அப். 14.6.) அவர் இரண்டாம் தரம் பிரயாணம் செய்தபோது சீலாவோடு அவ்விடத்திற்குப் போகாதது நிச்சயம். (அப். 14.6.) இதற்கு முந்தி அவர் சபைகளை நாட்டியிராவிட்டாலும், இந்தத் தடவை அவைகளை நாட்டியிருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. மூன்று வருஷங்களுக்குப் பின் அந்தச் சபைகளைச் சந்திக்கும்படி போனார். (அப்.18.23.)

இந்தச் சபைகளைச் சோந்தவர்களில் சிறு பங்கு யூதரும் பெரும்பாலும் புறஜாதியாருமாயிருந்தார்கள். (4.8.) புறஜாதிக் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் ஆகமங்களை நன்றாய்க கற்றவர்களாயிருந்தார்களென்று தோன்றுகிறது. (4. 21-31). அவர்கள் கிறிஸ்து மார்க்கத்தைச் சந்தோஷமாய் அங்கீகரித்துக் கொண்டதுமன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பிரசங்கித்த பவுல் அப்போஸ்தலன் பேரில் அதிகபட்சமுள்ளவர்களாயும் இருந்தார்கள். (4: 14, 15; 5. 7). சிலநாளுக்குப்பின்பு யூதமார்க்கப் போதகர்மார் அவ்விடத்துக்குப் போனார்கள். அக்காலத்தில் அவருக்குக் கொரிந்து பட்டணத்தில் அதிக இடையூராயிருந்த எருசலேம் பட்டணத்து கட்சிக்காரரே கலாத்தியா நாட்டுக்கும் போயிருப்பார்கள் என்று தோன்றுகிறது. (அப். 15. 1,2). இந்தக் கள்ளப் போதகர்கள் கலாத்தியா சபைகளில் நுழைந்து, ரட்சண்ய விஷயத்தில் புறஜாதிக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பெற்று மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டியது அவசியம் என்று போதித்ததுமன்றி, பவுல் என்பவர் பேதுரு முதலிய பன்னிரு அப்போஸ்தலருக்குத் தாழ்ந்தவர் என்றும்(1,2.அதி.), யூதர்களின் அபிமானத்தைக் கருதி நியாயப்பிரமாணத்தை அனுசரித்த அவர், புறஜாதியார் அதை அனுசரிப்பது அவசியமில்லையென்று போதித்ததால் அவர் யதார்த்தமுள்ளவர் அல்லரென்று சொன்னார்கள். (5'.11).

அவர்கள் இவ்வித போதனையைக் கொண்டு சபையில் பிரிவினையை உண்டாக்கி (5'.15) அநேகர் சத்திய நெறி தவறி நடக்கும்படி செய்தார்கள். (1.6; 3.1; 4.9). இவ்வாறு நெறிதப்பினவர்கள் முன்பு சுவிசேஷ சத்தியங்களை பக்திவைராக்கியத்துடன் ஏற்றுக்கொண்டது போலவே, கள்ளப்போதகர்கள் தங்களுக்குப் போதித்த பொய் உபதேசங்களையும் ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வித உபதேசங்களெல்லாம் சத்தியமல்ல என்று அப்போஸ்தலன் அவர்களுக்குச் சொல்லியிருந்தார். (1'.9; 4'.16). ஆயினும் அவைகள் மென்மேலும் விருத்தியடைந்து வந்ததால் அவைகளைக் கண்டிக்கும் பொருட்டு 54ஆம் வருஷத்தில் அப்போஸ்தலன் இந்த நிருபத்தைக் கொரிந்து பட்டணத்திலிருந்தாவது (அப். 18;1-3;20.1-3) எபேசு பட்டணத்திலிருந்தாவது (அப். 19'. 10) எழுதியிருப்பார் என்று தோன்றுகிறது.. இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் அடங்கிய கண்டிப்பான வார்த்தைகளையும், இந்த நிருபம் முழுவதிலும் அடங்கிய நியாயங்களையும் கவனிக்குங்கால், அப்போது சபைக்கு நேரிட்டிருந்த அபாயம் பெரிதென்று தோன்றும். இந்த நிருபத்தின் முக்கிய தாற்பரியம் யூதமார்க்கப் போதகர்களின் உபதேசங்கள் கிறிஸ்து மார்க்கத்தின் தன்மையையும், மேன்மையையும் கெடுக்கத்தக்கவைகள் என்று நிருபிப்பதேயாகும். தம்மைக் குறித்தும் தமது அப்போஸ்தல அதிகாரத்தைக குறித்தும் சத்துருக்கள் கற்பித்த உபதேசங்களெல்லாம் சத்தியமல்ல என்று பவுல் என்பவர் முந்திக் காட்டி, பிற்பாடு தாம் கொண்டிருந்த கருத்தை வெளிப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமர் நிருபத்தைப்போல் இந்த நிருபத்திலும் பாவஜன்மிகளாகிய மானிடர் நீதிமான்களாகும் முக்கிய விடயத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ரோமர் நிருபத்தில் இதையே பிரதான விடயமாயும், இந்த நிருபத்தில் இதை யூதபோதகர்களுடன் செய்யும் தர்க்க சம்பந்தமாயும் காட்டியிருக்கிறது.

சுய புண்ணியத்தால் சுகம் பெறலாமென்று சொன்ன புறஜாதியாரோடாவது, கிறிஸ்து மார்க்கத்தைத் தள்ளி மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் மோட்சானந்தம் பெறலாமென்று சாதித்த யூதர்களோடாவது அப்போஸ்தலன் தர்க்கமாடாமல், கிறிஸ்துரட்சகரைப் பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமல்ல; மோசேயின் சடங்காச்சாரங்களை அனுஷ்டிப்பதாலும் பரகதியடையலாம் என்று சொன்ன கட்சிக்காரரோடேயே வாதாடினார். நியாயப்பிரமாணம் அருளப்பட்ட நோக்கம் இதல்லவென்றும், அது கிறிஸ்துரட்சகரின் புண்ணியமரணத்தால் நிறைவேற்றித் தீர்ந்ததென்றும், அதனால் தேவ அருள் பெறலாமென்று நினைக்கிறவர்கள் கடவுள் ஏற்படுத்தின ஒன்றான ரட்சண்ய வழியை அவமதித்துத் தள்ளுகிறார்களென்றும் அப்போஸ்தலன் நியாய தோரணையாய் எடுத்துரைக்கின்றார்.

கிறிஸ்துரட்சகரின் திருவடியை நம்புவதினாலேயே பேரின்பவீடடையலாமென்று நிச்சயித்திருந்தபோதிலும், மோசேயின் நியாயப்பிரமாணம் நிறைவேற்றித தீர்ந்ததோ அல்லவோ என்பதைக் குறித்துச் சந்தேகங் கொண்டிருந்த பெலவீன விசுவாசிகளை பக்தியில் தேர்ந்த உத்தமர்கள் குற்றங்கூறாமல் சொல்லியிருந்தாலும், கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்திருந்தும் அதன் சாரத்தையும் சத்தியத்தையும் உணராமல் அதை அடியோடே குலைக்கத்தக்க அசத்தியங்களைப் போதித்தவர்களுக்கு அவர் எள்ளவும் இடங்கொடுக்கவில்லை.

**இந்த நிருபம் மூன்று பிரிவாயிருக்கின்றது.**

முதல் இரண்டு பிரிவுகளும் தர்க்க வகையாயும், கடைசிப்பிரிவு புத்தி போதனைகளைக் கற்பிக்கும் விதமாயும் இருக்கின்றது.

i. பவுல் என்பவர் திருவுளச் செயலால் அப்போஸ்தல உத்தியோகத் தையும் அதிகாரத்தையும் பெற்றவர் என்று காட்டப்பட்டிருக்கின்றது. (1, 2. அதி.)

ii. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினா லல்ல; கிறிஸ்து ரட்சகரைப் பற்றும் விசுவாசத்தினாலேயே, நீதிமான்களாகிறோம் என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. (3, 4. அதி.)

iii. முடிவுரையில் புத்தி போதனைகளும் எச்சரிப்புகளும் கற்பனைகளும் அடங்கியிருக்கின்றன. (5,6.அதி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கு ஆபத்தா?

(சங்கீதம் 50:15 ஐப் படித்துப் பார்!)

**"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்" என்று ஆண்டவர் கூறுகின்றார்.**

இந்த வேதவாக்கியம் எல்லோராலும் விரும்பப்படும் ஒன்று. ஆறுதலற்ற வேளைகளில் அடிக்கடி வாசிக்கப்படும் வசனம். வேதனையுடன் இருப்பவர்களின் தேறுதலுக்காகக் கூறப்படும் வார்த்தைகள். விண்ணப்பங்களை ஏறெடுக்கும் வேளைகளில் காட்டப்படும் மேற்கோள்.

இந்த பதினைந்தாம் வசனத்தைப் படித்தவுடனே 'ஆண்டவரே! ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்" என்பதாக வாக்குறுதி அளித்தீரே! நான் நாளாந்தம் கூப்பிடுகின்றேனே. . . ! இன்னும் எனக்கு விடுதலை இல்லையே!" என அங்கலாய்ப்போரும் உண்டு.

முன்பின் தெரியாத கனவான் ஒருவன் ஓடிவந்து, 'ஐயா எனக்கு இன்ன உதவியைச் செய்ய வேண்டும்.' என ஒரு காரியத்தைக் குறித்துக் கேட்கின்றார் என வைத்துக் கொள்வோம். அதே வேளை தினந்தோறும் சந்திக்கும் நமது வேலையாள் அவசரமான ஓர் உதவி கேட்கின்றான்.

நன்கு பரிச்சயமானவரும், நமது விருப்பு வெறுப்புக்களை உணர்ந்து நமக்கு ஏவல் புரிந்து நம்மோடு தொடர்புள்ளவருமாகிய அந்த வேலையாளுக்கே முதலில் உதவி செய்ய முன்வருவோம், அல்லவா?

பதினைந்தாம் வசனம் கூறுவதைக் கொண்டு விண்ணப்பங்களை ஏறெடுக்கும் முன்னர் அதற்கு முந்திய வசனத்தையும் ஒரு தரம் வாசித்தால் பெரிய உண்மை ஒன்று விளங்கும். வாசிப்போமா. . .!?

**'ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகின்றான்'** சங். 50:23 என கர்த்தர் உரைக்கின்றார். நீ ஸ்தோத்திர பலி செலுத்துகின்றாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதேசியின் மோட்ச பயணம்

கி.பி. 1662 ஆம் ஆண்டளவில் பெட்வோட் நகர சிறைச்சாலையில் இருக்க நேரிட்ட 'ஜோண் பன்யன்' என்பவர் கனவாய் உருவகித்து எழுதிய கதைத் தொடர் இது. இதன் வெளித் தோற்றத்தை ரசியாது உள்ளுணர்வுடன் நோக்கும்போதுதான் உண்மைகள் பல புரியும்.

## அங்கம்- 10

**☼ பிரயாணி சிங்கார மாளிகை சேருதல்**

அவன் அண்ணாந்து பார்க்கவே சற்று அப்பால் மா உயரமும் விநோதமுமாய்க் கட்டப்பட்டிருந்த ஓர் அரண்மனை காணப்பட்டது. அதற்கு ***சிங்கார மாளிகை** என்று பேர். அதைக் கண்டவுடனே கிறிஸ்தியான், இங்கே சேர்ந்தாவது இராத் தங்கலாம் என்று நடந்து போனான். சற்று நேரத்தில் மகா இடுக்கமான ஒரு வழியில் அவன் நடக்கவேண்டி இருந்தது; அப்படிப்பட்ட வழி ஒரு கூப்பிடு தூரம் இருக்கலாம். அங்கே அரண்மனை வாயிற்காப்போனுடைய குடிசை இருந்தது; அந்த இடுக்கு வழியில் அவன் கூர்மையாகப் பார்த்து நடந்து போகவே வழியில் ***இரண்டு சிங்கங்கள்** படுத்திருக்கக் கண்டான்; ஆகா, அச்சனும் சந்தேகியும் பார்த்து திரும்பிவிட்ட இடம் இதுதானாக்கும் என்று எண்ணிக் கொண்டான். அச் சிங்கங்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன; அந்தச் சங்கிலிகளை கிறிஸ்தியான் காணவில்லை. சிங்கங்களைக் கண்டவுடனே அவர்களைப் போலவே திரும்பி விடலாமோ என்று யோசித்தான்; கிறிஸ்தியான் பின்வாங்க யோசனையாய் இருப்பதை ***'விழிப்பாளன்'** என்கிற பேருடைய வாயிற்காப்போன் கண்டு, "நீ அவ்வளவு தெம்மாடியா? இந்தச் சிங்கங்கள் விலங்கு மாட்டப்பட்டிருக்கின்றன; இவ்விடத்தில் வருகிறவர்களிடத்தில் விசுவாசம் கொஞ்சமாவது உண்டோ, இல்லையோ என்று கண்டறிந்து கொள்ளும்படியாவே இவை வைக்கப்பட்டிருக்கின்றன. நீ அங்கும் இங்கும் விலகாமல் நடுவில் நடந்து வந்தால் யாதொரு சேதமும் உனக்கு வராது என்றான்.

---

*சிங்கார மாளிகை: கிறிஸ்து சபையொன்றைக் குறிக்கின்றது. அதனுள் பிரவேசித்தல் என்பது சபையில் சேர்தலைக் குறிக்கின்றது.

*சிங்கங்கள் 2 என்பது: பிசாசு, உலகம் ஆகிய சத்துருக்கள்

*விழிப்பாளன்: உண்மையுள்ள தேவபணிவிடைக்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எச்சரிக்கப்பட்டபடியே அவன் கவனமாய் நடந்து போனான். சிங்கங்கள் அவனைக் கண்டு கர்ச்சித்தனவே அல்லாமல் வேறொரு சேதமும் செய்ய இடம் இருக்கவில்லை. சிங்கங்களைக் கடந்தவுடனே அவன் ஆனந்தத்தால் கைதட்டி, பிழைத்தேன் என்று சொல்லி காவல் சேவகனண்டை சேர்ந்தான். சேர்ந்தவுடன் கிறிஸ்தியான், "ஐயா, இது என்ன மாளிகை? இங்கே நான் இராத் தங்கலாமா?" என்று கேட்டான்.

அதற்குச் சேவகன்: இம்மலையின் அதிபதி சீயோனுக்குப் போகும் பிரயாணிகளுடைய ஆதரவுக்காகவே இதைக் கட்டுவித்தார் என்று சொன்னதோடு, "நீ எங்கேயிருந்து வருகிறாய், எங்கே போகிறாய்?" என்றும் கேட்டான்.

கிறி. நான் நாசபுரியிலிருந்து புறப்பட்டு சீயோன் மலைக்குப் போகிறேன்; பொழுதடைந்து போனதால் இன்றிரவு இவ்விடத்தில் இராத்தங்கலாமே என்றுதான் கேட்கிறேன்.

கா சேவ. உன் பேர் என்ன?

கிறி. என் பேர் இப்போது கிறிஸ்தியான்; ஆனால் என் பழைய பேர் பக்தியற்றோன். நான் யாப்பேத்தின் சந்ததியில் பிறந்தவன். அந்த யாப்பேத்தை தேவன் சேமுடைய கூடாரங்களில் போய்க் குடியேறும்படி ஏவி விடுகிறவராய் இருக்கிறார்.

கா-சேவ. இப்படி நள்ளிரவில் வந்த காரணம் என்ன? பொழுது அஸ்தமித்துப் போயிற்றே!

கிறி. பொழுது அஸ்தமிக்கிறதற்கு வெகு நேரத்துக்கு முன்பே வந்திருப்பேன்; ஆனால் நான் ஒரு நீசன்தான். மலைக்கு அந்தப் பக்கத்தில் இருக்கிறதே நந்தவனம் அங்கே உறங்கிவிட்டேன். அப்படியும் முந்தி வந்திருப்பேன்.

ஆனால் நான் உறங்கினபோது என் சாட்சிப் பத்திரத்தை இழந்துவிட்டு உச்சி மலைமட்டும் வந்து பத்திரத்தைத் தேடினேன்; காணோம். உடனே நான் மறுபடியும் திரும்பி, உறங்கின நந்தவனம் மட்டும் ஓடி, பத்திரத்தைக் கண்டெடுத்துக் கொண்டு வருகின்றேன்; அதனாலேதான் இப்படி வந்து சேரும்படி ஆயிற்று.

கா-சேவ. நல்லது, நான் இந்த மாளிகையில் இருக்கும் கன்னியரில் ஒருத்தியை அழைப்பிக்கின்றேன்; அவள் வந்து உன்னோடே பேசுவாள்; உன் பேச்சு அவள் மனதுக்குச் சரியாய் இருந்தால், இந்த மாளிகையின் சட்டப்படி, மற்ற கன்னியர்களுடன் உன்னைக் குறித்து சிபாரிசு பண்ணி, உனக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்வார்கள்" (என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி, விழிப்பாளன் ஒரு மணியை அடித்தான். மணிச்சத்தம் கேட்டவுடனே *'யூகி' என்கிற நாமதேயமுடைய சிறப்பும் சௌந்தரியமுமான ஒரு மாது புறப்பட்டு வாசலண்டை வந்தாள்

யூகி: ஏது விசேஷம்?

கா-சேவ. இந்த ஏழை மனிதன் நாசபுரியிலிருந்து புறப்பட்டு சீயோன் மலைக்குப் போகிறானாம்; பிரயாணத்தால் இளைப்பாய் இருக்கிறதினாலும், நேரம் இரவாய் இருப்பதாலும் இவ்விடத்தில் இராத் தங்கிவிட்டு போகலாமா ஐயா என்று என்னைக் கேட்டான். அப்போழுது நான் 'இந்த அரண்மனைச் சட்டத்தின்படி ஒரு மாதைக் கூப்பிடுவேன்; அந்த அம்மாள் தனக்கு நலமாய்த் தோன்றுகிறபடி உன்னை நடத்துவாள்' என்று சொல்லி மணி அடித்தேன்."

அப்பொழுது யூகி மாது, "நீ எவ்விடத்தான்? எங்கே போகிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அவன் தான் சொல்ல வேண்டியதைச் சொன்னான். அப்புறம் அவள் நீ வழியில் கண்ட காட்சிகளும், பட்ட பாடுகளும் என்ன என்று கேட்டாள். அதற்கும் உத்தரவு சொன்னான். கடைசியாக உன் பேர் என்ன? என்று கேட்டாள். அதற்கு அவன்: என் பேர் கிறிஸ்தியான்; இங்கே இராத்தங்கி இளைப்பாறிக் கொள்ளும்படியாக எனக்கு மகா ஆவல் இருக்கிறது; சீயோனின் பிரயாணிகள் இளைப்பாறிக் கொள்ளும்படி இந்த மாளிகை சீயோன் மலைநாதரால் கட்டப்பட்டிருக்கிறதென்று கேள்விப்பட்டேன் என்று சொன்னான்.

சற்று நேரமானபின், 'நல்லது; நான் என் தோழிப் பெண்களில் இரண்டு மூன்றுபேரைக் கூட்டி வருகிறேன்' என்று சொல்லி வீட்டுக்குள்ளே போய், விவேகி! பயபக்தி! நேசமணி! என்று கூப்பிட்டாள். அச்சத்தம் கேட்டு மணிமாதுகள் மூவரும் வாசலண்டை சேர்ந்தார்கள். அவர்கள் மூவரும் கிறிஸ்தியானுடன் சற்றுநேரம் சம்பாஷித்த பின்பு 'உள்ளே வா' வென்று அழைத்துக்கொண்டு போனார்கள். அந்த மாளிகைக்குள் இருந்த கன்னி மாடத்து முற்றத்தில் கிறிஸ்தியான போனவுடன் அங்கிருந்த கன்னியாஸ்திரீகள் எல்லாரும் அவனைச் சந்தித்து: "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே!, உள்ளே வா" என்று வாழ்த்தி, 'இந்த மலையின் அதிபதி உன்னைப்போலொத்த பிரயாணிகளுடைய நன்மைக்கென்றே இந்த அரண்மனையைக் கட்டுவித்தார்' என்று சொன்னார்கள்.

---

*யூகி: மகா ஞானத்தோடு ஒருவனைக் கிறிஸ்துவின் சபையில் சேர்க்க வேண்டும் என உணர்த்த. . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தியான் அதைக்கேட்டு - தலைவணங்கிக் கொண்டான். அப்புறம் அவர்களைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் போய் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான்; உடனே தாகத்துக்குக் கொடுத்தார்கள். அவன் தாகம் தீர்ந்தபின்பு, இராச் சாப்பாடு தயாராகுமட்டும் காலம் விணாய்க் கழியாதபடி நம்மில் யாராவது பிரயோஜனமான சில விஷயங்களைப் பற்றி இவனோடு பேசிக்கொண்டிருப்பது நல்லதல்லவா என்று மூன்று மாதரும அவனுடன் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

பயபக்தி. சிநேகிதனே! இந்த அர்த்த ராத்திரியில் உனக்கு எங்கள் வீட்டில் மிகுந்த அன்போடு இடங்கொடுத்திருக் கிறோமே! உன்னுடைய நெடும் பிரயாண விசேஷங்களைச் சொல்லி எங்களை எழுப்புதலடையச் செய்தால் மெத்த சந்தோஷப்படுவோம்.

கிறி. நான் பட்ட பாடுகளை எல்லாம் மெத்த சந்தோஷத்தோடு சொல்லுகிறேன்; நீங்கள் கேட்கிறதே பெரிய காரியம்.

பயபக்தி. நீ தேசம் விட்டுத் தேசம் போகக் காரணம் என்ன?

கிறி. என் காதில் தொனித்த பயங்கரமான ஒரு சப்தமே என்னைப் பரதேசியைப்போல் பயணம் புறப்படச் செய்தது. நான் என் ஜனன ஊரில் இருந்தால் அழிவு என்மேல் வரும் என்றும் அதைத் தடுக்க என்னால் இயலாதென்றும் அச்சத்தம் தொனித்தது.

பயபக்தி. ஊரை விட்டது சரிதான்; இந்த வழியை எப்படிக் கண்டு பிடித்தாய்?

கிறி. அது தேவசெயல் என்றுதான் சொல்லவேண்டும். நான் அழிவின் செய்தியைக் கேட்டு மனக்கவலை கொண்டு, எங்கே போக வேண்டும் என அறியாதிருந்தேன்; ஒருநாள் நான் நடுநடுங்கி அழுது கொண்டிருக்கையில் சுவிசேஷகன் என்கிற பேருடைய ஒருவர் தற்செயலாய் என்னண்டை வந்து, திட்டிவாசலின் திசையைக் காட்டி வழி திருப்பி விட்டார். மற்றப்படி எனக்கு வழி தெரியாது. நான் திட்டி வாசலைச் சேர்ந்தது மதல் இந்தப் பாதையைக் கடந்து, இன்றிரவு உங்கள் நடுவில் சந்தோஷமாய்த் தங்கி இளைப்பாறுகின்றேன்.

பயபக்தி. நீ வியாக்கியானி வீட்டு வழியாக வரவில்லையா?

கிறி. அந்த வழியாய்த்தான் வந்தேன். அங்கே கண்ட காட்சிகளின் மகத்துவங்களை நான் என்ன சொல்ல! என் ஜிவகாலம் மட்டும் அக்காட்சிகளை மறக்கமுடியுமா? அப்பேர்ப்பட்ட காட்சிகளெல்லாம் கண்டேன். விசேஷமாக, கிறிஸ்துநாதர் பிசாசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதங்களோடு தமது கிருபையின் கிரியை நடத்திக்கொண்டு வருகிறார் என்பதைக் காட்டும் காட்சியும், பாவ விலங்கில் அடைபட்டு தேவனுடைய இரக்கத்தைப் பற்றி நம்பிக்கையற்றுப்போன இருப்புக்கூட்டுக் காட்சியும், நடுத்தீர்வை நாள் வந்துவிட்டது போலக் கனாக்கண்டவனுடைய காட்சியும் ஆகிய இம்மூன்றும் என் மனதிலிருந்து ஒரு நாளும் மாறிப்போகமாட்டாது.

பயபக்தி. அவன் கண்ட சொப்பனத்தைச் சொல்லக் கேட்டாயோ?

கிறி. அவன் தன் சொப்பனத்தைச் சொல்லச் சொல்லக் காது கொடுத்துக் கேட்டேன். ஆகா! என்ன பயங்கரமான சொப்பனம்! அதைக் கேட்கக் கேட்க என் இருதயம் நடுக்கம் கொண்டது, என்றாலும் அதைக் கேட்டதற்காகச் சந்தோஷப்படுகின்றேன்.

பயபக்தி. வியாக்கியானி வீட்டில் கண்டவை இவ்வளவுதானா?

கிறி. இவ்வளவா? அவர் என்னைக் கூட்டிக்கொண்டு ஒரு சிங்காரமான மாளிகையண்டை போய் அதை எனக்குக் காட்டினார்; அதிலுள்ளவர்கள் பொற்சரிகை உடுப்பு உடுத்தினவர்களாய் இலங்கினார்கள். ஒரு பராக்கிரமன் அதனுள் பிரவேசிக்கும்படி புறப்பட்டு, வழியில் ஆயுதபாணிகளாய் நின்று தடுத்தவர்களையெல்லாம் கண்டதுண்டமாக்கி உட்சென்றான். உடனே அங்கே இருந்தவர்கள் உள்ளே வரவும் நித்திய மகிமையைப் பெற்றுக் கொள்ளவும் வாழ்த்தினார்கள். அக் காட்சிகள் என் மனதுக்குச் சந்தோஷத்தைத் தந்ததால், வியாக்கியானி வீட்டிலேயே இன்னும் ஒரு வருஷம் இருக்கலாமோ என்று முதலாய் எண்ணம் வந்தது. ஆனால் நான் பின்னும் பிரயாணம் பண்ணவேண்டியிருந்ததால் அந்த ஆசையை விட்டுவிட்டேன்.

பயபக்தி. வேறேதாவது காட்சியை வழியில் கண்டதுண்டா?

கிறி. அங்கிருந்து சற்றுதூரம் போனவுடனே இரத்தசோரையாய் ஒரு மரத்தில் தொங்கும் ஓர் ஆளைக் கண்டேன். அவரைப் பார்த்துதான் தாமதம், என் முதுகில் இருந்த பாரச்சுமை உடனே விழுந்து விட்டது.; ஏனெனில் நான் ஒரு பாவச் சுமையால் வெகுகாலம் அவதிப்படுக்கொண்டிருந்தேன்; அந்த மரத்தடியில் அது விழுந்து போயிற்று. இப்படிப்பட்ட அதிசயத்தை நான் பிரமைகொண்டு அண்ணாந்து பார்த்தேன். அண்ணாந்து பார்க்கவே ஒருவர், என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சாட்சி பகர்ந்தார். வேறொருவர், என் பழைய கந்தைகளை என்னைவிட்டு எடுத்துப்போட்டு, இதோ நான் அணிந்திருக்கும் பொற்சரிகை ஓரமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அங்கியைத் தந்தார். இன்னொருவர், என் நெற்றியில் நீங்கள் பார்க்கிற இந்த அடையாளத்தைப் போட்டு, முத்திரை பதிக்கப்பட்ட இந்தச் சுருளையும் தந்தார்.

பயபக்தி. இன்னும் அனேக காட்சிகளையும் கண்டிருப்பாயே!

கிறி. ஆம்; வேறு சில விஷயங்களையும் நான் கண்டதுண்டு. நான் வருகிற வழியில் பேதை, சோம்பன், துணிகரன் என்னும் மூன்றுபேர் சங்கிலியும் காலுமாய்ப்படுத்துத் தூங்குகிறதைக் கண்டேன்; அவர்களை எழுப்பிவிட என்னால் ஆகுமா? நீயே சொல்லு. அப்புறம் வேஷக்காரன் மாயக்காரன் என்னும் இருவர் சுவரேறிக் குதித்து என்னுடன் வழியில் கூடி, நாங்களும் சீயோனுக்குத்தான் போகிறோம் என்று சொன்னார்கள். கடைசியாக அவர்கள் போனவழியும் தெரியாது; தொலைந்த வகையும் தெரியாது; நீங்கள் போகும் வழி சரி அல்ல என்று நான் அவர்களுக்குச் சொன்னதுண்டு. அவர்கள் என் பேச்சை நம்புவார்களா? அதற்கப்பால் இந்த மலை ஏற நான் பட்ட பாடுதான் என்ன? மலை தாண்டி இறங்கும் போது சிங்கங்களைக் கண்டு கலங்கின கலக்கத்துக்கு ஒரு கணக்குண்டா? வாசல் சேவகனாகிய விழிப்பாளன் இருக்கிறானே! அந்தப் புண்ணியவாளன் மாத்திரம் சத்தங்காட்டி, எனக்குத் தைரியம் சொல்லியிராவிட்டால், இதற்குள்ளாகத் திரும்பி வெகுதூரம் போயிருப்பேன். இப்போது தேவன் என்னை இந்த இடத்தில் கொண்டு வந்து சேர்த்ததற்காகவும், நீங்கள் என்னைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டு உபசரிக்கிறதற்காகவும் அவரை ஸ்தோத்திரிக்கின்றேன்.

விவேகி. நீ உன் ஜனன ஊரை நினைப்பதில்லையா?

கிறி. நான் புறப்பட்ட ஊரின் நினைவு சிலவேளை வரும். அந்த நினைவு வந்தவுடனே என் மனம் குன்றி, முகம் வாடிப் போகும். அந்த ஊருக்கு மறுபடியும் ஒரு தரம் போக வேண்டும் என்கிற நாட்டம் இருந்தால் அப்போதே திரும்பிப் போய் இருப்பேனே! இப்போதோ நான் ஒரு நல்ல தேசத்தையும், ஒரு பரம நாட்டையும் அல்லோ நாடுகின்றேன்!

விவேகி. உன் பழைய வாடிக்கைகளில் சிலவற்றையும் கூடவே கொண்டு வந்திருக்கிறாய் அல்லவா?

கிறி. என் மனதுக்குப் பிரியமாய் வளர்த்துவந்த மாமிச இச்சை என்னோடு வந்தது நிஜம்தான்; இப்பொழுது இவைகளெல்லாம் எனக்கு மனஸ்தாபமாய் இருக்கின்றது. என் வாழ்வுக்கேற்ற விஷயங்களை நானே தெரிந்து கொள்கிறதாயிருந்தால், அந்தப் பழையவைகளில் ஒன்றையும் வேண்டும் என்று விரும்பவே மாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையானதைச் செய்ய வேண்டும் என்கிற விருப்பம் எனக்கு இருக்கும் பொழுதே தீமையானதைச் செய்யும் விருப்பமும் இருக்கிறதென்று காண்கின்றேன்.

விவேகி. ஒரு வேளையில் உன் மனதைக் கலங்கச் செய்யும் காரியங்கள் இன்னொரு வேளையில் கடந்துபோனது போலக் காண்கின்றாயா?

கிறி. ஆம், ஆனால் அடிக்கடி அல்ல; எப்போதாவது ஒரு சமயத்தில் அப்படிக் காண்கின்றேன்; அப்படி உணருகிற நேரம் எனக்குப் பொன்போல் அருமையாயிருக்கும் காலம் என்று சொல்ல வேண்டும்.

விவேகி. எப்போதாவது ஒரு சமயாசமயங்களில் உன் மனக்கவலை மாறிப்போனதுபோலத் தோன்றுகிறதாகச் சொன்னாயே; அதற்கு ஏதாவது முகாந்தரங்கள் உண்டா?

கிறி. உண்டு, நான் சிலுவையண்டை பார்த்தவைகளை நினைவுகூருகையில் அது விலகும்; நான் என் சரிகை ஓரமுள்ள அங்கியைக் கூர்மையாய் நோக்குகையிலும் அது விலகும்; என் மடியில் இருக்கும் இந்தச் சுருளை எடுத்துப் பார்த்தாலும் விலகும். நான் என்ன இடத்தை நோக்கிப் பயணம் செய்கிறேன் என்று சற்று ஆழமாய் யோசித்தாலும் உடனே அது விலகுகிறது.

விவேகி. சீயோன் மேல் உனக்கு ஏன் நாட்டம் இருக்கிறது?

கிறி. நாட்டம் இராதா? எனக்காகச் சிலுவையில் தொங்கினவர் ஜிவனோடிருக்கிறாரே! இந்த என் கண்களால் அவரைக் காண்பேனே! இந்நாளில் என் மனதைக் கலக்குகிறவைகளெல்லாம் ஓய்ந்து அங்கே சுகமாய் இருப்பேன்; அங்கே சாவே இல்லையாம். என் மனதுக்கேற்ற சிநேகிதரோடு கூடி உறவாடுவேன்.

அம்மணி! சத்தியத்தைச் சொல்லுகிறேன் கேள். அவரால் என் பாரச்சுமை நீங்கிவிட்டதால், அவர்மேல் எனக்கிருக்கும் நேசம் கொஞ்சம் அல்ல; என் உள்நோயையிட்டு மெத்தவும் இளைத்துப் போகின்றேன்; சீயோனுக்கு நான் போனால் ஒருநாளும் சாகாமல் இருந்து, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஓயாமல் பாடிக்கொண்டிருக்கும் கூட்டத்தோடு வாழுவேன்" என்றான்.

பயணம் தொடரும். . . .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனே!

ஊருக்குத் தீமைகள் செய்து – உன்
உள்ளம் மகிழ்வது பாவம்!
யாருக்கும் தீமையில்லாமல் – நீ
அழிந்து விடுவதே லாபம்!

கண்ணொன்று தீங்கு செய்தாலே – அந்தக்
கண்ணைப் பிடுங்கிட வேண்டும்!
திண்ணிய கையதைச் செய்தால் – வெட்டித்
தீயிலெரித்திட வேண்டும்!

கவிஞர் ஏ.பாராஜ் தேவதாசன்

## நாவும் பற்களும்

(ஓர் உரையாடல்)

**நாவு:** "பற்களே! நீங்கள் என்னைச் சுற்றி எவ்வாறு பாதுகாப்பாக இருக்கின்றீர்கள்! உணவை அரைத்து உதவி புரிகின்றீர்கள்! இவ்வளவு பேர் இருந்தும் என்னைத் தாக்குவதில்லை. உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யலாம் என்று யோசிக்கின்றேன்."

**பற்கள்:** ஹ..ஹ..ஹ ஹ் ஹா! (சிரிக்கின்றன)

உன்னை நாம் பாதுகாப்பது என்பது உண்மைதான். ஆனால் நீ தாறுமாறாக ஏதாவது பேசிவிட்டால் உன்னை ஒருவரும் ஒன்றும் செய்வதில்லை. உடைபடுவது நாங்கள்தான். நீ எங்களுக்கு உதவி செய்ய விரும்பினால் உன்னை அடக்கு; நல்லதைப் பேசு அது போதும்.

"நாவும் நெருப்புத்தான்; அது அநீதி நிறைந்த உலகம். சிறிய அவயவமாய் இருந்தும்கூட பெருமையானவைகளையே பேசும்;. சிறியதொரு நெருப்பு பெரிய காட்டையே கொளுத்தி அழித்துவிடுவது போல் நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி ஆயுள் சக்கரத்தையே கொளுத்தி விடுகிறது." என்கிறார் ஜேம்ஸ் என்னும் அப்போஸ்தலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடபுலத்திலிருந்து வரும்
## 'தெளிவு' பத்திரிகையின் வாழ்த்து

இன்றைய காலகட்டத்தில் சிறந்த தொடர்பாடல் இல்லாமல் மனிதன் பல அவஸ்தைகள் படுகின்றான். குடும்பங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கிடையில் பல பிளவுகள் ஏற்படக் காரணமாக அமைவதும் இந்தத் தொடர்பாடல் இன்மையேயாகும்.

இத்தகைய சூழ்நிலையில் 'தொடர்பு' சஞ்சிகை வெளிவருவது உண்மையிலேயே போற்றுதற்குரியது. அரிய பல கருத்துக்களைத் தாங்கி வரும் கட்டுரைகள் 'தொடர்பில்' பிரசுரமாகின்றன. தொடர்ந்தும் இம்முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், சிறுவர்களை ஊக்கப்படுத்த அவர்களின் சிறிய கவிதைகளைப் பிரசுரித்தல் நன்று. ஏனெனில், கிறிஸ்தவ சிறுவர்கள் கிறிஸ்தவ சஞ்சிகைகளில்தான் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வளர முடியும். கிறிஸ்தவ சஞ்சிகைகள் அதற்குக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

'தொடர்பு' தனது பக்கங்களை தரமான ஆக்கங்களினால் நிரப்பி இருக்கின்றது. அத்தனை விடயங்களும் அருமையானவை.

'தொடர்புக்கும்' தொடர்பு ஆசிரியர் தேவதாசன் ஜெயசிங் அவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்! தொடர்பு சஞ்சிகை மென்மேலும் வளர்ந்து மக்கள் மத்தியில் சிறந்த தொடர்பாடலாக வளரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

V.P தனேந்திரா
- ஆசிரியர்

'தெளிவு'
227, சென் பெனடிக்ற் றோட்
அரியாலை மேற்கு.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி J.P. ஜேசன்
எழுதும்

# கந்தவர்க்க மலை ரகசியம்!



(‘உன்னதப்பாட்டு’ எனும் உயர் காவியத் தழுவல்)

குன்றுகளும் குவடுகளும் நின்று நிமிர்ந்த அந்நாட்டில் அழகிய காடுகள். அங்கே ஓடியாடித் திரியும் உயிரினங்கள். அழகிய அத்தி மரங்கள்; அவற்றுக்கிடையே கிச்சிலி மரங்கள். தெரியும் தூரமளவுக்கு திராட்சைத் தோட்டங்கள். மலைச் சரிவுகளில் மருதோன்றிச் செடிகள். மனத்தைக் கவரும் மாதுளம் மரங்கள். நறுமணம் பரப்பும் நளதச் செடிகள். வகை வகையான கனி மரங்கள்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கிய அந்நாட்டில் பெற்றோரை இழந்த பிள்ளைகள் நால்வர் வாழ்கின்றனர். மூத்த மூவரும் ஆண்கள். நாலாவது பெண். பெயர் ‘சூலமித்தி.’

‘பெற்றவரில்லாப் பிள்ளை’ என்ற பெயரே அற்றவளாக அவள் வளர்க்கப்படுகின்றாள். திருமண வயதினை அடைந்த அவளுக்கு, தேவையான அனைத்தும் சகோதரர்களால் நிறைவு செய்யப்படுகின்றன. அவளுக்கென்றொரு திராட்சைத் தோட்டம்கூட கொடுக்கப்படுகின்றது. நங்கையொருத்திக்குத் தேவையெனக் கருதப்படும் நகைகள் அனைத்தாலும் அவள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றாள்.

ஆனால் ஒரே ஒரு குறை. அவளது நிறம் கறுப்பு என்பதால் யாரும் அவளுடன் நெருங்கிப் பழகுவது குறைவு. உடல் கறுப்பாக இருந்தாலும் உள்ளத்தில் ஆசைகள் இல்லாதிருக்குமா? என்றோ ஒரு நாள் யாரோ ஒருவரிடம் தன் இதயத்தைப் பறிகொடுத்து விடுகின்றாள்.

தலையணையை அணைத்த வண்ணம் தன் - கனவில் வந்த - கருத்தில் இணைந்த அந்த இளவரசனின் எழிலை இதயத்தால் எடை போடுகின்றாள் சூலமித்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? கறுப்பி ஒருத்திக்குக் காதலனாக வந்தவன் ஓர் இளவரசனா? ஆச்சரியமாக இல்லை? கற்பனையில் அவரைக் கண்டாளோ? அல்லது கனவில் தான் அவர் அவளைச் சந்தித்தாரோ? மானசீகக் காதல் மட்டும்தானோ? அல்லது காந்தர்வ மணம் ஏதும் நடந்து விட்டதோ? என்னவென்று எடுத்துரைக்க முடியாத நிலையில் அவள்...

"என் இதயத்தைக் கொள்ளை கொண்ட என் நேசர்!! - சக்கரவர்த்தித் திருமகன்!! ஆ! அவர் அழகென்ன! ஆளுமை யென்ன! வெண்மையும் சிவப்பும் கலந்த அவரது திருமேனியின் வடிவென்ன.!

ஆயிரமாயிரம் ஆண்களிலும் சிறப்பானவர் அவரல்லவா! தங்கமயமான தலை. கரு கரு சுருள் கேசம். பாலில் கழுவப்பட்டவை போன்ற பார்வையுடைய அவரது புறாக் கண்கள்! அந்தப் பார்வை இன்னொருதரம் எனக்குக் கிடைத்தால்....!

கந்தவர்க்கப் பாத்தி போன்ற கன்னங்கள்! அவற்றை 'மணமிகு மலர்கள்' என்றுகூடச் சொல்லலாம். அத்தனை மென்மை! அவற்றை ஒருதரம் ஸ்பரிசிக்கக் கிடைத்தால்.....!

லீலி புஷ்பங்கள் போன்ற அவரது அதரங்கள்! வாசனையுள்ள வெள்ளைப் போளம் வடியும் அந்த வாய்...! அதில் ஒரு முத்தம் பெறக் கிடைத்தால்..........!!!

படிகப் பச்சை பதித்த பொன் வளையல்கள் போன்ற கரங்கள். அவற்றின் அரவணைப்பு ஒரு தரம் கிடைத்தால்..........!!!

இந்திர நீல ரத்தினம் இழைத்த பிரகாசமான அவரது மேனியில், ஒரு தரம் சாயக் கிடைத்தால்..........!!!

பசும்பொன்னிற் பதித்த வெள்ளைக் கல் தூண்கள் போன்ற அவருடைய கால்கள் என் இருப்பிடம் நோக்கி மட்டுமே நடந்து வருமானால்....!! ஆ.....!!

இவ்வாறாக எண்ணுக்கடங்கா தொலைவில் இருக்கும் அந்த இளவரசர் தன் கண்ணுக்குள் இருப்பதாகவே எண்ணி ஊண் மறக்கின்றாள்; உறக்கம் துறக்கின்றாள்.

தன் கருத்தைக் கவர்ந்தவரை அரச குமாரிகள் கவர்ந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் அவளை அறியாமலே வார்த்தைகள் வெளிவந்து விடுகின்றன.

"என் நேசரே, திராட்சை மதுவிலும் அதிகமாய் உமதன்பு என்னை மயக்குகின்றதே! பல கன்னியர்கள் உம்மை நேசிக்கக்கூடும். ஆனால் நான் உம்மை விடமாட்டேன். உமக்குப் பிறகாலேயே ஓடி வருவேன். என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொண்டு உமதண்டை இழுத்துக் கொள்ளும். உமது முத்தம் எனக்கு மட்டுமே கிடைக்க வேண்டும்....!

தங்கையின் தனிமையையும் அத் தனிமையின் புலம்பலையும் அவளது சகோதரர் அறிகின்றார்கள்! சூலமித்தியின் நோக்கிலும் போக்கிலும் புரியாத புதிர்கள் இருப்பதை உணர்கின்றார்கள்!

'இவளை எவ்வளவாய் நேசித்தோம்? எப்படியெப்படியெல்லாம் பராமரித்தோம்? என்னென்னவெல்லாம் கொடுத்தோம்? ஆனால் இவள் தன் இதயத்தை எவரிடமோ பறிகொடுத்து நிற்கின்றாளே! கன்னங்கரேலென காகத்தைப் போல் இருக்கும் இவளுக்கும் காதல் ஒரு கேடா?! என ஆத்திரப்படுகின்றார்கள்.

அன்று தொடக்கம் அவள் அவர்களுக்குத் தங்கையாக அல்ல; தங்களுக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டங்களைக் காக்கும் காவற்காரியாக நியமிக்கப்படுகின்றாள்.

மணங்கவர்ந்த ஒருவரை தன் மனத்துள் கொண்டதனால் வாழ வேண்டிய தன் வாலிப வயதில் சூலமித்தி திராட்சை தோட்ட காவற்காரியாக கடமை புரிய நேரிடுகின்றது.

திராட்சைத் தோட்டங்களெல்லாம் பூவும் பிஞ்சுமாகக் காட்சியளிக்கின்றன. சிறு நரிகளும் குழிநரிகளும் தோட்டங்களை அழிக்கும் நாட்டத்துடன் வருகின்றன. பிஞ்சுகளைக் கோத பறவைகள் முயல்கின்றன. மலர்களைத் துழாவ வண்டுகள் குலாவுகின்றன.

கொடிய வெய்யிலிலும், கொட்டும் மழையிலும், சொட்டும் பனியிலும் சுறுசுறுப்பாகப் பணிபுரிகின்றாள் சூலமித்தி.

அவளது கால்கள் தோட்டங்களைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. கண்களோ, தன் இதயத்திற்கினியவர் இம்மரங்களுக் கிடையில் மறைந்து நிற்கமாட்டாரா எனத் தேடுகின்றன. மனம் மானசீகமாக மணாளனோடு உறவாடுகின்றது.

தான் அழகற்றவளாக இருப்பதால் இளவரசர் தன்னை ஏற்க மாட்டாரோ என்ற அச்சமும் அவளுக்கு இருக்கின்றது.

தொலைவிலுள்ள மேட்டிலே சிலமேய்ப்பர்கள் மந்தை மேய்க்கின்றனர். தன் இதய காவலராகிய அந்த இளவரசரை இந்த மேய்ப்பரின் மேய்ப்பராகக் காண்கின்றாள் சூலமித்தி. அங்கலாய்க்கின்றது அவள் உள்ளம்.

"என் ஆத்ம நேசரே, என் அன்பின் மேய்ப்பரே, உமது மந்தையை நீர் எங்கே மேய்க்கின்றீரோ? மத்தியான இளைப்பாறுதலுக்கு எங்கே அதை மடக்குகின்றீரோ?" எனப் புலம்புகின்றாள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் உடனே கிடைக்கின்றது.

அது அசரீரியோ. . . ! அல்லது அவளது இதயக் குமுறலின் எதிரொலியோ! . . . இல்லாவிட்டால் சூலமித்தியின் மனப் பிரமையோ! . . . தெரியவில்லை.

இளவரசரின் குரல் இது.

"என் பிரியமே, பார்வோன் மன்னனது பரிகளின் பவுஞ்சு போன்றவளே, அழகிய உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் எத்தனை அழகடி! என் பிரியமே, நீ ரூபவதி; உன் கண்கள் புறாக் கண்களடி ....!

நான் என் மந்தையை எங்கே இளைப்பாற்றுவிக்கின்றேன் என்பதை நீ அறியாயாகில் மந்தையின் காலடிகளைத் தொடர்ந்து வா; மேய்ப்பர்களின் கூடாரங்களண்டையில் வந்து பார்!"

குரல் ஓய்கின்றது.

மலைத்துப் போகின்றாள் சூலமித்தி."என் சகோதரர் என்னை அழகற்றவள் என்றார்கள். என் தோழியர் என்னைக் கறுப்பி என்றார்கள். ஆனால் என் உள்ளம் கவர்ந்த காதலர், சக்கரவர்த்தித் திருமகனாம் இளவரசர் என்னை 'ரூபவதி' என்று அழைக்கின்றாரே!!

எனப் புலம்பியபடி அங்குமிங்கும் ஓடியவள் அருகிலிருக்கும் நீர்நிலையில் தன் முகத்தைப் பார்க்கின்றாள். அங்கே தெளிந்த நீருள் பளிங்கு போல் பட்டுத் தெறித்த பகலவனின் கதிர்கள் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. கரங்களினால் நீரை அள்ளி முகத்தில் தெளித்தபடி புள்ளி மானாய்த் துள்ளி ஓடுகின்றாள்.

அப்படி என்னதான் நடந்துவிட்டது.?

**வருவாள்**

**சூலமித்தி!**



**அவளையே**

**கேட்போம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✳ சிறுவர் பகுதி

# மீனவன் பேதுரு



வேத வாசிப்பு : மத் 4:18-22 மாற். 1:16-20; லூக். 5:1-11; யோ. 1:40-42

**வேதாகம வரலாறு**

**✦ பேதுருவின் பாலிய பருவம்**

வெகு காலத்திற்கு முன்பு இயேசு வாழ்ந்த நாட்டில் ஓர் அப்பா அம்மாவுக்கு அந்திரேயா, சீமோன் என்ற இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்கள் கலிலேயாக் கடலின் பக்கம் வசித்தனர். கடற்கரையோரமாக அடிக்கடி மீன் பிடித்தும், படகில் ஏறி விளையாடியும் வந்தார்கள். இப்பையன்களின் தாயார், நோவா, தாவீது யோசேப்பு போன்றவர்களின் வேதாகம சரித்திரங்களை அவர்களுக்கு அடிக்கடி சொல்லி வந்தாள். சில சமயங்களில், தேவன் அவர்களுக்குச் சமாதானமும், மகிழ்ச்சியும் கொண்டுவர, ஒருவரை எவ்வாறு பூலோகத்திற்கு அனுப்பப் போகின்றார் என்றும் சொன்னாள். இவ்விரு பையன்களும், இந்த இரட்சகர் சீக்கிரம் வருவார், அதனால் அவரைக் கண்டு அவரை அறிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தனர்.

நமது ஆலயம் போன்ற ஜெப ஆலயம் ஒன்றுக்கு அந்திரேயாவும், சீமோனும் சென்றனர். போதகராக இருந்த ஆசிரியர், வேதாகமத்திலிருந்து அவர்களுக்கு வாசிக்கவும். எழுதவும் கற்றுக் கொடுத்தார். அநேக சங்கீதங்களைப் பாடினார்கள். வேத வசனங்களை மனப்பாடம் செய்தார்கள்.

**✦ பேதுரு இயேசுகிறிஸ்துவைச் சந்திக்கின்றார்.**

அந்திரேயாவும், சீமோனும் வளர்ந்து வாலிபர்களாகி, மீன் பிடிக்கிறவர்களானார்கள். அவர்களுடைய தொழிலில் யாக்கோபு, யோவான் என்ற இரண்டு சிநேகிதர்கள் உதவி செய்தனர். அவர்கள் தங்கள் படகுகளைக் கடலில் செலுத்தி விற்பனைக்காக அநேக மீன்களைப் பிடித்தார்கள்.

ஒருநாள் அந்திரேயாவும் யோவானும், யோவான்ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்பதற்கு யோர்தான் நதிக்குச் சென்றனர். அந்தப் போதகர் திடீரென தமது பிரசங்கத்தை நிறுத்தி, "இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன பொழுது இதன் பொருள் என்ன என்று அந்திரேயா அறிய ஆவலாயிருந்தார். அந்தப் போதகர் விளக்கமாகச் கூறிய பொழுது, அவர்களுடைய தாயார் அவர்களுக்குச் சொல்லியிருந்தவர் ஒரு வேளை இவராக இருக்கலாம் என உணர்ந்தார். அந்திரேயோவும், யோவானும் அவரைப் பின் சென்று அவருடன் பேசினார்கள். பின்பு அவர்கள் திட்டமாக அவர்தான் என உணர்ந்தனர்.

அந்திரேயோ அதிக மகிழ்ச்சியினால் தன்னுடைய சகோதரனாகிய சீமோனைக் காண விரைந்து சென்றார். "நாங்கள் கிறிஸ்துவைக் கண்டோம்! அதனால் சீக்கிரம் வா" என்று சொன்னார்.இயேசு சீமோனைப் பார்த்தபொழுது, "நீ சீமோன்; ஆனால் நான் உன்னைப் பேதுரு என்று அழைக்கின்றேன்' என்றார். பேதுரு என்றால் 'பாறை' எனப் பொருள்படும். பேதுரு திடமுள்ளவராகவும், தைரிய முள்ளவராகவும், பாறையைப் போல உறுதியுள்ளவராகவும் இருக்கப் போகின்றார் என்று இயேசு கருதினார். 'பேதுரு' என்ற புதிய பெயரால் எல்லோரும் அவரை அழைக்க ஆரம்பித்தனர்.

இயேசு சுற்றித் திரிந்து பல நல்ல செயல்களைப் புரிந்து வந்தார். தேவனை நேசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் மக்களுக்குப் போதித்தார். அவர் அடிக்கடி பேதுருவின் வீட்டில் தங்கி அவனுடைய நல்ல நண்பரானார்.

### ✦ வெறுமையான வலை

ஒரு சமயம் பேதுருவும் அந்திரேயாவும் ஒரு படகையும், யாக்கோபும் யோவானும் மற்றொரு படகையும் எடுத்துக் கொண்டு போய் வலைகளை வீசினர். ஆனால் அவர்கள் அதைப் படகிற்குள் இழுத்த பொழுது வலைக்குள் ஒரு மீன்கூட இல்லை. அவர்களுடைய படகுகளை வேறோர் இடத்திற்கு நகர்த்திச் சென்று, மறுபடியும் பிரயாசப்பட்டனர். ஆனால் ஒரு மீனையும் பிடிக்கவில்லை. மறுபடியும், மறுபடியும் இரவு முழுவதும் வலையை வீசினர். ஆனால் ஒன்றும் அகப்படவில்லை. விடியற் காலமான பொழுது, விற்பதற்கு அவர்களிடம் ஒரு மீன்கூட இல்லை. அவர்களுடைய படகைக் கரைக்குக் கொண்டு வந்தபொழுது அவர்கள் களைப்பாகவும் பசியாகவும் இருந்தனர். அவர்கள் தங்களுடைய வெறுமையான வலையைச் சுத்தம் செய்யவும், பழுது பார்க்கவும் கரைக்கு இழுத்து வரும் பொழுது, துக்கத்துடன் இருந்தனர்.

### ✦ பேதுரு இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகின்றார்

அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தபொழுது, கூட்டமாக மக்கள் வருவதையும், அவர்கள் மத்தியில் இயேசு இருப்பதையும் கண்டனர். இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து மக்களுடன் பேசுவதற்காக, பேதுரு சீக்கிரமாகத் தனது படகைக் கொடுத்தார். எவ்வளவு திடப்படுத்தும் வார்த்தைகளை அவர் பேசினார்!

இயேசு பேசி முடித்த பொழுது பேதுருவைப் பார்த்து, "உன்னுடைய படகை ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் உங்களுடைய வலையைப் போடுங்கள்" என்றார்.

"ஐயரே! நாங்கள் இரா முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் பிடிக்கவில்லை"என்று பேதுரு சொன்னார். பேதுரு ஒரு மீனும் பிடிக்கவில்லை என்று இயேசுவுக்குத் தெரியும். அவனுக்கு உதவி செய்ய விரும்பினார். பேதுரு இயேசுவை நேசித்தார்.

எனவே அங்கே ஒரு மீனும் இல்லை என்று அவன் எண்ணிய போதிலும் அவன் கீழ்ப்படிந்து வலையைப் போட்டார். அவர்கள் ஏராளமான மீனைப் பிடித்தபடியினால் வலையே கிழிந்து விடும் போலிருந்தது. மீன்கள் நிறைந்து வலை கனமாக இருந்ததால் படகினுள் அதை இழுத்துப் போடக் கூடாதவாறு இருந்தது. யாக்கோபையும், யோவானையும் வந்து உதவி செய்யும்படி அழைத்தனர். அந்த வலையை இழுக்க எல்லா மனிதரும் தங்கள் முழுப் பலத்தையும் உபயோகித்தனர். இரண்டு படகுகளும் திரளான மீன்களால் நிறைந்திருந்ததால் மூழ்க ஆரம்பித்தன.

இவ்வளவு அதிசயமான காரியம் யாதொன்றையும் பேதுரு இதற்கு முன் பார்த்ததில்லை. இயேசு தமது தெய்வீக வல்லமையினால் இந்த அற்புதத்தைச் செய்திருக்கிறார் என்று அவர் அறிந்திருந்தார். பின்பு பேதுரு கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் முகங்குப்புற விழுந்தார்.

✦ **பேதுரு சீடனாகின்றார்.**

"சீமோன் பேதுருவே! என்னைப் பின்பற்றி வா! இது முதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்று இயேசு மெதுவான குரலில் கூறினார். அதன் பொருள் என்னவென்றால், இயேசுவைப் பற்றியும் அவரின் அன்பைப் பற்றியம் பேதுரு மக்களுக்குக் கூற வேண்டும் என்பதே. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் யாவரும் இயேசுவை எங்கும் பின் செல்ல ஆரம்பித்தனர். அவருடைய சீடர்களாகவும், உதவியாளர்களாகவும் ஆனார்கள். மற்றவர்கள் இயேசுவினிடம் வரும்படி உதவி செய்ய அவர்கள் கற்றுக் கொண்டார்கள்.

நாமும் அவருடைய சீடர்களாக இருக்க இயேசு விரும்புகின்றார். நாம் எப்படி அவரைப் பின் செல்லக் கூடும்? நாம் மற்றவர்களிடம் இயேசுவைப் பற்றிக் கூறி, அவரை நேசிக்கவும் சேவிக்கவும் அவர்களைக் கொண்டுவரும் பொழுது நாமும் மனிதரைப் பிடிக்கிறவர்கள் ஆவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிற்பியின் செயல்

பிரான்ஸ் நாட்டு ஏழைச் சிற்பி ஒருவன் களிமண்ணால் மிகவும் அழகான வடிவம் ஒன்றை அப்போதுதான் செய்து முடித்திருந்தான். அந்த இரவில் மிகக் கொடிய குளிரும் ஈரமும் ஏற்படவே, தனது சிலை உறைபனியால் சேதமாகுமோ என அஞ்சினான். கடைசியில் தனது போர்வைகளை எடுத்துக் கொண்டான். ஆனால், காலையில் குளிர் தாங்காமல் அவன் செத்துக் கிடந்தான். அந்தச் சிலையோ பழுதாகாமல் அப்படியே இருந்தது.

கைகளால் செய்யப்படுபவற்றிற்காகவும், உயிரற்ற பொருட்களுக்காகவும், தம் உயிரையே கொடுக்க ஆயத்தமாயிருக்கும் மக்கள் இருக்கின்றனர். அவ்வாறாயின் ஆண்டவர் தமது சாயலில் படைத்த உயிருள்ள ஆத்துமாக்களுக்காகத் தமது ஜீவனைக் கொடுக்க, எவ்வளவு அன்புள்ளம் கொண்டிருந்திருக்க வேண்டும்?


எனவே, அள்ளக் குறையாத அவரது அன்பை, அவரது பாதபடியில் அமர்ந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின் நாம் நம்மில் அன்புகூருவது போல பிறரையும் நேசித்து - அன்புகூர்ந்து அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் மட்டுமே நாம் நமது சிருஷ்டிகரும், ஆண்டவருமானவரின் நோக்கத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றினவர்களாவோம்.

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் நம் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமப் புதிர் — 62



☆ தேடிக் கண்டுபிடியுங்கள்!
'தவளைகளுக் கொப்பான 3 அசுத்த ஆவிகள்'

☆ ✉ விடையைத் தபாலட்டையில் மட்டுமே எழுதுங்கள்.

☆ பரிசு : அதிஷ்டசாலிகளுக்கு மூவருக்குப் பரிசாக ஒருவருட சந்தா 150/= செலுத்தப்படும்..

| புதிர் 60 சரியான விடை : தீத்து 3:12 |
|---|

## பரிசு பெறுவோர்

* ஸ்பர்ஜன் சாமுவேல் - வத்தளை
* S. மைக்கல் - ஊவா கரந்தகொல்ல
* A. கொன்சலா - மன்னார்

## பாராட்டுப் பெறுவோர்

| | | | |
|---|---|---|---|
| * J. ஷாந்தி | - பலாங்கொட | * D.R. பெர்ஸி | - ஹற்றன் |
| * M.E.S. ஏபல் | - கொழும்பு | * A. சார்ள்ஸ் | - நாவலப்பிட்டி |
| * B.R. மாணிக்கம் | - கொட்டகல | * E. போல்ராஜ் | - ஏக்கல |

## வாழ்த்துக்கள் பெறுவோர்

| | | | |
|---|---|---|---|
| * மேரி டோசன் | - லிந்துல | * S. சகாயரோஸ் | - லிந்துல |
| * மலர் டோசன் | - பூண்டுலோயா | * A.M.S. எட்வட் | - பள்ளேபொல |
| * A. சலோமி | - மட்டக்களப்பு | * K. கமலேஸ்வரி | - மட்டக்களப்பு |
| * V. ஜெயராஜ் | - வத்தளை | * K. கீதாலஷ்மி | - உடபுச்சல்லாவ |
| * S. லெனாட்சுதன் | - செட்டிபாளையம் | * Bro. K. மாணிக்கராஜா | - முள்ளியவளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Prayer of

- St. Francis of Assisi -



**Lord!** make me an instrument of your peace.
Where there is hatred, let me sow love;
Where there is injury, pardon;
Where there is discord, union;
Where there is doubt, faith;
Where there is despair, hope;
Where there is darkness, light;
Where there is sadness, joy'
for your mercy and truth's sake.
O, Divine Master!
Grant that I may not so much seek
To be consoled as to console,
To be understood as to understand,
To be loved as to love,
For it is in giving that we receive,
It is in pardoning that we are pardoned,
It is in dying that we are born to eternal life.






'அருள் மணி'
(மாதாந்த வெளியீடு)
சிறாருக்கான ஒரு சிற்றேடு
2002 மார்ச் 05 ஆம் திகதி முதல்
வெளிவருகின்றது.
வருட சந்தா ரூபா 50/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வாசகர்களுக்கு...

* **தொடர்பு** - சஞ்சிகையைப் பற்றி
  நீங்கள் அறிந்திருக்கலாம் அல்லது கேள்விப்பட்டிருக்கலாம்.

* இதற்கான ஆண்டுச் சந்தா
  **தபாற் செலவு உட்பட ரூபா 150/=** அதாவது

* நாளொன்றுக்கு இப் பணிக்காக நீங்கள் செலவிடப் போவது
  **41** சதம் மட்டுமே.

* ஆண்டுச் சந்தாவை **காசுக் கட்டளையாகவோ, காசோலையாகவோ அல்லது முத்திரைகளாகவோ** அனுப்பலாம்.

* சில வேளை இச் சஞ்சிகை உங்களுக்குப் பயன்படாதிருக்கலாம். இதைப் பெற்று உங்கள் நண்பர் ஒருவருக்குக் கொடுப்பதன் மூலம் இப் பணிக்கு நீங்கள் உதவி செய்யலாம். ஏனெனில், இது இறைபணியுடன் இணைந்த ஒரு தமிழ்ப் பணியுமாகும்.

* எனவே, எம்முடன் இணைந்து இப் பணிக்குக் கரம் கொடுக்குமாறு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை அழைக்கின்றோம்.

## நீங்கள்  மாறினால் ......!



உங்களது புதிய முகவரியை
உடனே எமக்கு எழுதுங்கள்!

*** பழைய முகவரியையும்
இணைக்க மறவாதீர்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org